# தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்
## பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.
## தலைமை இடம் - சென்னை.

**K.சந்திரசேகரன்**
**தலைவர்**

**R.சந்திரசேகரன்.**
**பொதுச்செயலாளர்**

<u>சுற்றறிக்கை எண் 18 / 2017</u>

26.10.2017

அன்புடையீர்,

வணக்கம்.11.10.2017 அன்று தமிழக அரசு ஊழியர்களுக் 7-வது ஊதியக்குழு பரிந்துரைப்படி ஊதிய உயர்வு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நமது மின்வாரியத்திலும் ஊதிய உயர்வுப் பிரச்சனை சூடு பிடிக்கத் தொடங்கியது. 12.10.2017 அன்று நமது சங்கம் மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சார்பில் மின்வாரியத் தலைவர் அவர்களை, நேரில் சந்தித்து பேச்சு வார்த்தையினை உடனடியாகத் துவங்கிட வேண்டிக் கொண்டதைத் தொடர்ந்து, 16.10.2017 அன்று அனைத்துத் தொழிற்சங்கங்களையும் ஒரு சேர அழைத்து மின்வாரியம் பேச்சு வார்த்தை நடத்தியது.

ஊதிய உயர்வு 1.1.2016-ல் பெற்ற அடிப்படை ஊதியத்தினை 2.57 காரணியால் பெருக்கி புதிய ஊதியம் வழங்கப்படும், 1.1.2016-ல் பெற்ற 125% அகவிலைப்படி ஊதியத்துடன் இணைக்கப்படும். HRA, CCA முதலிய படிகள் அரசு ஊழியர்களுக்கு இணையாக வழங்கப்படும் என்று நிர்வாகம் அறிவித்ததை சங்கங்கள் ஏற்றுக் கொண்டன. ஆனால் 1.1.2016 முதல் ஊதிய உயர்வு வழங்கப்பட்டாலும், பணப்பலன் 1.10.2017 முதல் தான் வழங்கப்படும் என்று நிர்வாகம் கூறியதை சங்கங்கள் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டன.

இதனைத் தொடர்ந்து, 20.10.2017 அன்று மின்வாரியத் தலைவரிடமும், 24.10.2017 அன்று மாண்புமிகு மின்துறை அமைச்சரிடமும், 1.1.2016 முதல் ஊதிய உயர்வு நிலுவைத் தொகையினை வழங்கிட வேண்டும் என்று அனைத்துச் சங்கங்கள் சார்பிலும், முறையீடு செய்யப்பட்டது. நிலுவைத் தொகையினைப் பற்றி அலுவலர்களிடம் கலந்தாலோசித்து, மீண்டும் தொழிற்சங்கங்களை அடுத்த வாரத்தில் அழைத்துப் பேசுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதனிடையில் 23.10.2017 முதல் மின்வாரியம் சங்கங்களை தனித் தனியாக அழைத்து ஊதிய உயர்வு, வேலை பளு திருத்தம் மற்றும் இதர கோரிக்கைகள் தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தியது.

நமது சங்கத்துடன் 24.10.2017 அன்று மாலை 5.30 மணியளவில் பேச்சு வார்த்தை நடைபெற்றது. நமது சங்கத்தின் சார்பில் பொதுச்செயலாளருடன் சங்கத் தலைவர், நிதிச்செயலாளர், மாநில மகளிர் அணிச் செயலாளர், 2 துணைத்தலைவர்கள், 2 இணைச்செயலாளர்கள், உதவிப் பொதுச்செயலாளர் மற்றும் ஈரோடு மண்டலச்செயலாளர் திரு.B.கோபாலகிருஷ்ணன் ஆகிய 10 பேர் கலந்து கொண்டோம். இத்துடன் இணைக்கப் பட்டுள்ள கடிதத்தில் உள்ள பிரச்சனைகள் அனைத்தையும் ஒவ்வொன்றாக விவரித்துப் பேசினோம்.

நிர்வாகம் 2.57 என்பதற்குப் பதிலாக 2.42 என்று முடித்துக்கொண்டால் 1.1.2016 முதல் நிலுவைத் தொகை வழங்கப்படும் என்று தெரிவித்தது. எக்காரணம் கொண்டும் 2.57 என்பதைக் குறைத்திட ஒப்புக்கொள்ள மாட்டோம் என்று உறுதியாகத் தெரிவித்தோம். நிலுவைத் தொகை பற்றி அமைச்சர் அடுத்தவாரம் பேசுவதாகத் தெரிவித்துள்ளதால், இதரப் பிரச்சனைகள் பற்றிப்பேசலாம் என்று தெரிவித்தோம்.

ஏற்கனவே உள்ள வேலை பளுவை செய்வதே கடினமாக இருக்கும் போது, மேலும் உயர்த்துவது ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்தோம். இதர கோரிக்கைகளில் நிர்வாகத்தின் அணுகுமுறை தொழிலாளர்களுக்கு சாதகமாகவும், பாராட்டத் தக்க வகையிலும் இருந்தன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

1982 முதல் நமது சங்கம் இணைந்திருக்கும் PSI-யின், 30-வது உலகத் தொழிற்சங்க மாநாடு எதிர்வரும் 30.10.2017 முதல் 3.11.2017 வரை ஸ்விட்சர்லாந்து நாட்டின் ஜெனிவா நகரில் நடை பெறுகிறது.

1907-ல் துவங்கப்பட்ட PSI-யில் நாம் இணைந்த பிறகு 7 உலக மாநாடுகள் நடைபெற்றுள்ளன.

| வ.எண் | உலகக்காங்கிரஸ் எண். | ஆண்டு | இடம் | நமது சங்கத்தின் சார்பில் கலந்து கொண்டது. |
|---|---|---|---|---|
| 1 | 23-வது | 1985 | Caracus/ Venezuvela/South America | திரு.ச.வெ.அங்கப்பன், பொதுச்செயலாளர் |
| 2 | 24-வது | 1989 | Harare/Zimbabway / SouthAfrica | திரு.S.ஆறுமுகம், தலைவர் |
| 3 | 25-வது | 1993 | Helsingi/Finland | திரு.ச.வெ.அங்கப்பன், |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பொதுச்செயலாளர் |
| 4 | 26-வது | 1997 | Yokohama/Japan | திரு.S.முருகேசன்,<br>அமைப்புச்செயலாளர் |
| 5 | 27-வது | 2002 | Ottawa/Canada | திரு.C.சுப்ரமணியம்,<br>துணைத்தலைவர்<br>Not attended due to Visa problem |
| 6 | 28-வது | 2007<br>Centinary Celeberation | Viyanna/Austria | திரு.K.சந்திரசேகரன்,<br>தலைவர் |
| 7 | 29-வது | 2012 | Durban/South Africa | Nobody Attended due to internal Union Problems |

நமது சங்கத்தின் ஆதரவுடன் 2013-14-ல் PSI-யில் இணைந்துள்ள நமது சகோதர சங்கமான தொழிலாளர் முன்னேற்ற சங்கமும் இம்முறை நடைபெறவிருக்கும் 30-வது உலக மாநாட்டில், முதல் முறையாக கலந்து கொள்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நமது சங்க பொதுச்செயலாளரும், தொழிலாளர் முன்னேற்ற சங்க பொதுச்செயலாளர் திரு.சிங்காரஇரத்தினசபாபதி அவர்களும் இணைந்து 29.10.2017 அன்று அதிகாலை 01.45 மணிக்கு சென்னையிலிருந்து புறப்பட்டு 30.10.2017 முதல் 03.11.2017 வரை ஜெனிவா மாநாட்டில் கலந்து கொண்டு, 4,5 தேதிகளில் ஸ்விட்சர்லாந்திலும், 6,7,8 தேதிகளில் பாரிஸ் நகரிலும் தங்கி, 9.10.2017 காலை 10 மணியளவில் பாரிஸிலிருந்து புறப்பட்டு 10-ந் தேதி அன்று அதிகாலை 0.15 மணியளவில் சென்னை வந்து சேருகிறோம்.

உறுப்பினர்களும், பொறுப்பாளர்களும் இந்த இடைப்பட்ட நாட்களில் ஏதேனும் அவசரப் பிரச்சனைகள் இருப்பின் நமது சங்க நிதிச் செயலாளர் அவர்களை தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

உலகத் தொழிற்சங்க மாநாட்டில் பங்கு பெறும் இந்த அரிய வாய்ப்பினை எனக்கு வழங்கிய சங்கத் தலைவர் மற்றும் அனைத்துப் பொறுப்பாளர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் எனது பணிவான நன்றி.

எங்களது தொழிற்சங்கப்பயணம் வெற்றி பெற உங்களது நல்வாழ்த்துக்களை வேண்டுகிறோம்

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்

பெறுநர்.
கிளைச்செயலாளர்கள், கோட்டச்செயலாளர்கள்,
வட்டச்செயலாளர்கள்,
வட்டத்தலைவர்கள்,
மண்டலச்செயலாளர்கள், மற்றும்
மத்திய சங்கப்பொறுப்பாளர்கள்.
நகல் : செய்தி மடல்.

To. 09-10-2017

The Chairman Cum Managing Director,
TANGEDCO,
Chennai – 2

Respected Sir,

Sub: Trade Union representatives – Going abroad to attend the world trade union leaders meet during October 30th to November 3rd –holding wage negotiations discussion – Reg.

********

We would like to inform the CMD that we the following unions :-

1. Tamil Nadu Electricity Board Accounts and Executive Staff Union
&
2. Tamil nadu min kazhaga Thozhilalar Munnetra Sangam,

have been affiliated to the world trade union organization viz Public Services International , shortly known as PSI.

P.S.I. is a Global union federation of 669 Public Services trade unions representing 20 million workers in 154 countries. PSI represents workers in social services, health care, municipal services, Central Government and Public Utilities.

PSI founded in Germany during the year 1907 is holding its world congress once in 4/5 years hosted by its affiliated unions in different countries. Now this year, its 30th world congress is proposed to be held in Geneva, Switzerland from 30th October to November 3rd being hosted by the Swiss trade union.

Workers from across the world will gather in Geneva.

1) To reject the privatization of our lives,
2) To unveil the un-truths of Corporate ideology and chaos of market failure,
3) To construct alternations based on the power of organized labour and
4) To fight for our firm belief " people over profit" .

The PSI General Secretary, Rosa Pavanelli has invited us to attend the PSI Congress In her letter dt.04.08.2017

Accepting the invitation we the following representatives from the respective unions have proposed to participate in the Congress.

1. R.Chandrasekaran ( General Secretary, TNEB / AESU )
2. S.Rathinasababapathy ( General Secretary, TMTM Sangam)

In this connection we would request the CMD may be pleased to instruct the wage negotiating committee to hold its 5th and further rounds of wage revision discussion either before the 25th of October or after the 10th of November, 2017 so as to enable our unions also to actively participate in the important wage negotiations benefitting 90 thousand employees and equal number of pensioners.

Thanking you,

Yours faithfully,

Sd.---------------------

General Secretary

பெறுநர் 20.10.2017

இயக்குநர் / நிதி,
தலைவர்,
வாரிய ஊதிய உயர்வுப் பேச்சவார்த்தைக்குழு,
டான்ஜெட்கோ,
சென்னை – 2.

ஐயா,

பொருள் : சிறப்பு நிலை காலமுறையில் பணியாற்றுபவர்களுக்கும் - ஊதிய உயர்வு வழங்கிடக் கோருதல்.

பார்வை : 16.10.2017 அன்று நடை பெற்ற பேச்சு வார்த்தை.

-----------------

1.12.2015 முதல் மின்சாரத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு சம்மந்தமான பேச்சு வார்த்தையில் நிரந்தரத் தொழிலாளர்களின் ஊதியம், அரசு ஊழியர்களைப் போலவே 2.57 காரணியால் பெருக்கி வழங்கப்படும் என்பதை தாங்கள் அறிவித்தீர்கள்.

அரசு ஆணை 303, நாள். 11.10.2017-ல் நிரந்தர ஊழியர்கள் ஊதியத்தைப் போலவே, சிறப்பு நிலை காலமுறை ஊதியத்தில் பணிபுரிவோருக்கும் 2.57 காரணியால் பெருக்கி ஊதிய உயர்வு வழங்கப்படுவது பற்றி பத்தி 20 மற்றும் 21-ல் கூறப்பட்டுள்ளது. இதற்கான அட்டவணை iv – ல் ஊதிய விகிதப்பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது.

ஊதிய விகிதப்பட்டியலில் உள்ள ரூ.1300-3000 சிறப்பு நிலை காலமுறை ஊதியம்தான் மின்வாரியத்தில் உள்ள பகுதிநேரத் துப்புறவுத் தொழிலாளர்களுக்கும் வழங்கப் படுகிறது.

எனவே அரசு ஆணையைப் பின்பற்றி மின்வாரியத்தில் சிறப்பு நிலை காலமுறை ஊதியமான ரூ.1300-3000-ல் பணியாற்றும் பகுதிநேரத் துப்புறவுத் தொழிலாளர்களுக்கும் 2.57 காரணியால் பெருக்கி 1.12.2015 முதல் புதிய ஊதியம் வழங்கிட வேண்டுகிறோம்.

இவர்களுக்கு ஒரு சுமாரான வாழ்க்கைத் தரம் உறுதி செய்திட இதர நிரந்தரத் தொழிலாளர்களைப் போலவே இவர்களுக்கும் அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, மருத்துவபடிகள், ஆண்டுயர்வுகள் வழங்கிட வேண்டுமென்று அரசாணை பத்தி 22-ல் கூறப்பட்டுள்ளதையும் தங்களது கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்.

எனவே அரசாணையில் கூறப்பட்டிருக்கும் சலுகைகளை மின்வாரியப் பகுதிநேரத் துப்புறவாளர்களுக்கும் (சிறப்புநிலை காலமுறை ஊதியம் பெறுபவர்கள்) வழங்கிட வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்

பெறுநர் 20.10.2017

இயக்குநர் / நிதி,
தலைவர்,
வாரிய ஊதிய உயர்வுப் பேச்சவார்த்தைக்குழு,
டான்ஜெட்கோ,
சென்னை – 2.

ஐயா,

பொருள்: பணியாளர்களின் பதவி உயர்வில் - தேக்கநிலை – பணிக்காலத்தில் குறைந்தது 3 பதவி உயர்வுகளை உறுதி செய்ய வேண்டுவது.

பார்வை:
1) வாரிய நிர்வாகத்திற்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையே 8.7.98-ல் ஏற்பட்ட இருதரப்பு ஒப்பந்தம்.
2) வாரிய நிர்வாகத்திற்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையே தொழிலாளர் ஆணையர் முன்னிலையில் 18.11.2009-ல் ஏற்பட்டமுத்தரப்பு ஒப்பந்தம்.
3) வாரிய உத்திரவு எண். B.P.No.(Ch) 239, dt.7.12.2009

************

மின்வாரியத்தில் பணியாற்றும் பணியாளர்களின் பதவி உயர்வில் ஏற்படும் தேக்க நிலையை தொழிற்சங்கங்களுடன் விவாதித்த பின் 8.7.98-ல் ஏற்பட்ட இருதரப்பு ஒப்பந்தம், சரத்து 12-ல் கீழ்கண்டவாறு வரையறை செய்யப் பட்டது.

12. STAGNATION IN PROMOTION

" *TamilNadu Electricity Board would like to evolve a promotional policy such that every regular employee on time scale of pay will be assured of three promotions in his entire service. The modelities on this will be discussed and finalized in consultation with the parties"*

ஆனால் மேற்படி ஒப்பந்தப்படி தொழிற்சங்கங்களுடன் பேசிடவுமில்லை, பணிக்காலத்தில் 3 பதவிஉயர்வுக்கான கொள்கை ஏதும் உருவாக்கப்படவும் இல்லை.

எனவே இப்பிரச்சனை மீண்டும் தொழிற்சங்கங்களால் வலியுறுத்தப்பட்டு பார்ஜவ 2-ல் காணும் 18.11.2009 தேதிய 12(3) முத்தப்பு ஒப்பந்தத்தில் சரத்து 7(vii)ல் கீழ்கண்டவாறு உத்திரவாதம் அளிக்கப்பட்டது.

7(vii) " *To remove stagnation in promotion, the Board would like to evolve such promotion policy that every regular employee on time scale of pay, will be assured of their promotions in their entire service. The modalities on this will be discussed and finalized in consultation with the parties."*

:

மேற்கண்ட ஒப்பந்தப்படி பணிக்காலத்தில் 3 பதவி உயர்வுகள் வழங்குவது பற்றி பரிசீலித்து பரிந்துரை செய்திட பார்வை 3-ல் காணும் வாரிய உத்திரவு B.P.No.(Ch) 239, dt.7.12.2009 – ல் 6 அலுவலர்களைக் கொண்ட உயர்மட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

மேற்கண்ட குழு 22.1.2010, 10.2.2010, 10.3.2010, 11.3.2010 மற்றும் 27.3.2010 தேதிகளில் கூடிப்பேசி ஆய்வு செய்து தனது பரிந்துரையை கீழ்கண்டவாறு வழங்கியது.

13. Minimum of three promotion in the entire service of an employee :

" *In the case of employees who are fully qualified for promotion, even then the individual is not getting promotion, due to want of vacancy, then he/she can be given third promotion pay fixation on the last day of his retirement, subject to the condition that the individual should have completed 28 years of qualifying service on the date of his retirement."*

மேற்கண்ட பரிந்துரையை வழங்கி 7 ஆண்டுகள் ஆகியும் இதுநாள் வரை பரிந்துரையை அமுல் படுத்திட எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை. இதனால் பணியாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகிறார்கள்.

உதாரணத்திற்கு

1985-ல் பணியில் சேர்ந்த கணக்காளர்கள் 23 ஆண்டுகள் கழித்து கணக்கீட்டு ஆய்வாளர் என்ற முதல் பதவி உயர்வு 2008-ல் பெற்றார்கள் பின்னர் 2012-ல் வருவாய் மேலாளர் எனும் 2-வது பதவி உயர்வு பெற்றார்கள். இன்னும் ஓரிரு ஆண்டுகளில் ஆண்டுகளில் பணிஓய்வு பெறும் இவர்களுக்கு அடுத்த பதவிஉயர்வு பெறுவதற்கான வாய்ப்பில்லை. தற்போதும் வருவாய் மேலாளர்களாகவே பணிபுரிகிறார்கள்.

அதே சமயம் வாரிசு வேலையில் 2003-ல் கணக்கீட்டாளர்களாகப் பணியில் சேர்ந்தவர்கள் 2014-ல் கணக்கீட்டு ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற்று 2017-ல் வருவாய் மேலாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

1985-ல் கணக்கீட்டாளர்களாகப் பணியில் சேர்ந்தவர்களும், 2003-ல் கணக்கீட்டாளர்களாகப் பணியில் சேர்ந்தவர்களும் தற்போது ஒன்றாக வருவாய் மேலாளர்களாகப் பணியாற்றுவதும், ஒரே தர ஊதியம் ரூ.4300- பெறுவதும், இரண்டு பதவி உயர்வு மட்டும் பெற்று அடுத்த ஆண்டு ஓய்வு பெறுபவர்களுக்கு ஏமாற்றத்தையும், விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளதை தாங்கள் பரிசீலித்து ஏற்கனவே ஒப்பந்தங்களில் உறுதியளித்தபடியும், வாரிய உயர் அலுவலர்கள் குழு அளித்த பரிந்துரை படியும் இவர்கள் ஓய்வு பெறும் நாளில் 3-வது பதவி உயர்வு கொடுத்து ஓய்வு பெறச்செய்திடுமாறு வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்

பெறுநர் 20.10.2017

இயக்குநர் / நிதி,
தலைவர்,
வாரிய ஊதிய உயர்வுப் பேச்சவார்த்தைக்குழு,
டான்ஜெட்கோ,
சென்னை – 2.

ஐயா,

பொருள் : விடுபட்டுப்போன ஒப்பந்தத் தொழிலாளர்கள் - மின்வாரியத்தில் நிரந்தரப்படுத்திட வேண்டுவது தொடர்பாக.

பார்வை : வாரிய உத்திரவு எண். 9, நாள் 09.01.2008.

10.08.2007 அன்று மின்வாரியத்திற்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையே தொழிற்தகராறு சட்டம் பிரிவு 12(3)-ன் கீழ் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில், தொடர்ந்து கருணைத்தொகை பெற்று வந்த 21,600 ஒப்பந்தத் தொழிலாளர்கள் பட்டியல் தயாரிக்கப்பட்டு வாரியஉத்திரவு எண்.44, நாள் 6.9.2007-ன்படி படிப்படியாக நிரந்தரம் செய்யப்பட்டார்கள்.

நிரந்தரம் செய்வதற்காக தயாரிக்கப்பட்ட மேற்கண்ட பட்டியலில் இடம் பெறத் தவறியவர்களின் முறையீட்டினை பரிசீலித்து, அவர்களுக்கும் நிரந்தரம் வழங்கிட வாரிய உத்திரவு எண். 9, நாள் 09.01.2008-ன்படி உயர் அலுவலர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

குழுவின் பரிசீலனைக்கு கீழ்கண்ட குறிப்புகள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது.

1) சில ஆண்டுகள் கருணைத்தொகை வழங்கப்பட்டு, பின்னர் வழங்காமலிருந்து: பின்னர் 2005-06-ல் கருணைத்தொகை வழங்கப்பட்டவர்கள்.
2) 6.1.98-க்கு முன்னர் ஒப்பந்தத் தொழிலாளர்களாக பணியில் அமர்த்தப் பட்டாலும் கருணைத்தொகைக்கு வழங்கிய அனுமதிப்பட்டியலில் இடம் பெறத் தவறியவர்கள்
3) 5.1.98-க்குப் பிறகு ஒப்பந்தத் தொழிலாளர்களாக பணியில் அமர்த்தப் பட்டவர்களுக்கு கருணைத்தொகை வழங்குவது மற்றும் நிரந்தரம் செய்வது.
4) கருணைத்தொகை பெறாவிட்டாலும், தொழிலாளர் ஆய்வர் நிரந்தரம் வழங்கிட உத்திவிட்டப்பட்டியலில் இடம் பெற்றவர்கள்.

மேற்கண்ட நிபந்தனைகளை திருப்தி செய்து நிரந்தரம் பெறத் தகுதி பெற்றவர்கள் கூட ஆண்டுகள் 8 ஆகியும் இன்னும் நிரந்தரம் பெறாமல் சுமார் 4 ஆயிரம் ஒப்பந்தத் தொழிலாளர்கள் அவதிக்குள்ளாயுள்ளனர்.

எடுத்துக்காட்டாக திருவாளர்கள். ராஜா, P.சகாய ராஜா, மற்றும் G.முருகதாஸ். ஆகியோர் வேலூர் வட்டத்தில் 1991 முதல் 2000 ஆண்டுவரை ஒப்பந்தத் தொழிலாளர்களாக பணிபுரிந்து 8.8.1998-ல் அடையாளம் காணப்பட்டனர். அதன் பின்னர் தொடர்ந்து 5 ஆண்டுகள் கருணைத்தொகை பெற்றுள்ளனர்.

மேலும் இவர்கள் தொழிலாளர் ஆய்வாளர், வேலூர் அவர்களிடத்தில் பணி நிரந்தம் கோரி வழக்கு பதிந்து ப.மு.எண்.1801/ 2005 நாள். 27.09.2005 மூலம் தீர்ப்பு பெற்றுள்ளனர். வாரியம் இந்த உத்திரவின் பேரில் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடுத்த W.P.No.16034/2007 வழக்கானது 7.4.2011-ல் இவர்களுக்கு சாதகமாக வந்துள்ளது. ( Contract labour will be entitled to all the benefits and as confirmed by the division bench and the board is directed to implement)

தலைமைப்பொறியாளர்/பணியமைப்பு அவர்கள் குறிப்பாணை.நாள்.20.02.2008ன்படி (1) 8.7.2007-க்கு முன்பாக தொழிலாளர் ஆய்வாளர் உத்திரவு பெற்றிருந்தாலோ, (2) 8.8.1998-ல் அடையாளம் காணப்பட்டவராக இருந்தாலோ தினக்கூலி அடிப்படையில் ஒப்பந்தத் தொழிலாளராக பணியமர்த்திக்கொள்ளலாம் என்ற உத்திரவை வேலூர் வட்ட நிர்வாகம் கடைபிடிக்கவில்லை.

பின்னர் தலைமைப்பொறியாளர் / பணியமைப்பு அவர்களின் க.எண்.015633/145/ ஜி65/ ஜி652/2017. நாள் 23.02.2017-ன்படி வேலூர் மேற்பார்வை பொறியாளர் அவர்களுக்கு விவர அறிக்கை கோரப்பட்டது. இந்த கடிதத்திற்குப் பதிலாக மேற்பார்வை பொறியாளர் வேலூர் அவர்கள் க.எண்.004400/ 149/ மே.பொ. / வே.மி.ப.வ. / நிபி-3 நிமே/ 2017 நாள். 30.03.2017-ல் தலைமைப்பொறியாளர்

/ பணியமைப்பு அவர்களின் கு.ஆ.நாள் 20.02.2008-ன்படி திருவாளர்கள் G.முருகதாஸ், P.சகாயராஜ் மற்றும் S.ராஜா ஆகியோர் தகுதியானவர்கள் என்றும் ரூ.250- தினக்கூலி அடிப்படையில் பணியில் அமர்த்திக்கொள்ள பரிந்துரைசெய்து CE/P அவர்களின் அனுமதி வேண்டியுள்ளார். இதுநாள்வரை அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை.

எனவே ஊதிய உயர்வுப் பேச்சவார்த்தைக்குழு இதில் தனிக்கவனம் செலுத்தி, கோப்புகளை ஆய்வு செய்து வாரிய உத்திரவு எண் 9-ன்படி தகுதி பெற்ற ஒப்பந்தத் தொழிலாளர்களை மின்வாரியத் தொழிலாளர்களாகப் பணியில் அமர்த்திட விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்

பெறுநர் 21.10.2017

இயக்குநர் / நிதி,
தலைவர்,
வாரிய ஊதிய உயர்வுப் பேச்சவார்த்தைக்குழு,
டான்ஜெட்கோ,
சென்னை – 2.

ஐயா,

பொருள் : இளநிலை பொறியாளர் 2-ம் நிலை – ஊதிய பாகுபாட்டினை சரிசெய்ய வேண்டுதல்.

----------------

மின்சாரவாரியத்தில் இளநிலைபொறியாளர் 2-ம்நிலைக்கு களப்பணியாளர்கள், தொழில்நுட்பஉதவியாளர்களுக்கு 3:1 என்ற விகிதாச்சாரத்தில் பதவி உயர்வு வழங்கப்படுகிறது.

களப்பணியாளர்களுக்கு LI/CI பணியில் சேர்ந்த தேதி, மற்றும் ஜாதிப் பங்கீடு ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு முதன்மை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது.

அவ்வாறு 2009, 2012, ஆண்டுகளில் இளநிலைபொறியாளர் 2-ம்நிலை பதவி உயர்வு, பெரும்பாலும் F.M.I.Gr-லிருந்து வழங்கப்பட்டது. அவர்களுக்கு ஊதியம் ரூ.9600-34,800+4300 G.P. வழங்கப்பட்டது.

அதற்குப் பிறகு வேலைபளு ஒப்பந்தப்படி கணிசமான Spl.Gr. F.M. பொறுப்புகள் உருவாக்கப்பட்டதால் 2016-ல் இளநிலை பொறியாளர் 2-ம் நிலை பதவிஉயர்வு Spl.Gr.F.M.–லிருந்து வழங்கி அவர்களுக்கு ரூ.10,100-34,800+5100G.P.யும் வழங்கப்பட்டது.

இதனால் களப்பணிப்பொறுப்பு மற்றும் இளநிலைபொறியாளர் 2-ம் நிலையில் 7 ஆண்டுகள் மூத்தவர்கள் குறைவானசம்பளம் ரூ.9600-34,800+4300 G.P.யும் இளையவர்கள் அதிகமான சம்பளம்ரூ.10,100-34,800 +5100 G.P.யும் பெறும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த ஊதிய பாகுபாட்டினை களைந்திட வேண்டி CE/P அவர்களுக்கு எங்களது சங்கத்தின் 23.03.2017 கடிதம் வாயிலாக முறையிட்டுள்ளோம். எங்களது முறையீடு இன்னமும் நிலுவையில் உள்ளது. ( நகல் இணைக்கப்பட்டுள்ளது )

தற்போது ஏற்படும் ஊதிய உயர்வின் போது இந்தப் பாகுபாட்டினை களையாவிட்டால் சுமார் 2000 மூத்த 2-ம் நிலை இளநிலை பொறியாளர்களுக்கு பாதிப்பு தொடர்ந்து நீடிக்கும். பணியாளர்கள் மத்தியில் ஒரு அதிருப்தியை ஏற்படுத்தும்.

எனவே தாங்கள் அருள் கூர்ந்து இப்பிரச்சனையைப் பரிசீலனை செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கிட வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்

பெறுநர் 21.10.2017

இயக்குநர் / நிதி,
தலைவர்,
வாரிய ஊதிய உயர்வுப் பேச்சவார்த்தைக்குழு,
டான்ஜெட்கோ,
சென்னை – 2.

ஐயா,

பொருள் : Asst.Programmer – புதிய பொறுப்பு – பதவி உயர்வுக்கான மேல்நிலைப் பொறுப்புகளை உருவாக்கிட வேண்டுவது.

பார்வை : (Per) FB Tangedco Proceedings No.43, dated 30.07.2012

------------------

மின்சார வாரியத்தில் அட்டைப்பட்டியலில் பணிபுரியும் தொழில் நுட்ப உயர்கல்வித் தகுதி கொண்ட 42 பணியாளர்களைத் தேர்வு செய்து முதற்கட்டமாக அவர்களுக்கு இளநிலை பொறியாளர் 2-ம் நிலைக்கு இணையாக Asst.Programmer என்ற பொறுப்பில் ரூ.9600-34,800+4300 G.P சம்பளத்தில் நியமிக்கப் பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

3 ஆண்டுகளுக்கு மேலாகியும் அவர்கள் அடுத்த பதவி உயர்வு பெறுவதற்கான மேல்நிலை பொறுப்புகள் இன்னமும் உருவாக்கப்படாமல் உள்ளது.

தங்களது பணியில், தங்களுக்கு எதிர் காலம் என்ன? என்பதைத் தெரியாமல் தொழிலாளர்கள் பணியாற்றுவது அவர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை.

எனவே தற்போது Asst.Programmer –களாக பணியாற்றும் தொழிலாளர்களுக்கு அடுத்த பதவி உயர்வு பொறுப்பினை உடனடியாக நிர்ணயம் செய்திட அன்புடன் வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்

பெறுநர் 21.10.2017

இயக்குநர் / நிதி,
தலைவர்,
வாரிய ஊதிய உயர்வுப் பேச்சவார்த்தைக்குழு,
டான்ஜெட்கோ,
சென்னை – 2.

ஐயா,

பொருள் : மின்வாரியம் - செவிலியர்கள் - அரசு செவிலியர்களைவிட குறைவான ஊதியம் - சரி செய்திட வேண்டுவது.

-------------------

தமிழ்நாடு மின்வாரியத்தில் தற்சமயம் 4 செவிலியர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்களது ஊதியம் ரூ.5400-20200+2800 G.P. என வழங்கப்படுகிறது.

இவர்களைப் போலவே கல்வித் தகுதி பெற்று தமிழக அரசில் பணிபுரியும் செவிலியர்களுக்கு ரூ.9300-34800+4450 G.P. மற்றும் செவிலியர்கள்படி மாதம் ரூ.500- வழங்கப்படுகிறது. அரசு மருத்துவ மனைகள் மட்டுமின்றி, புறப்பணி அடிப்படையில் நமது மின்வாரியத்தில் பேஸின் பிரிட்ஜ் மற்றும் தூத்துக்குடி அனல்மின் வட்டத்திலுள்ள மருந்தகங்களில் பணிபுரியும் அரசு செவிலியர்கள் உள்நோயாளிகள் இல்லாத ஆரம்ப சுகாதார மையம், இராஜபவன், சட்டமன்ற விடுதி, தலைமைச் செயலகம், ESI மருந்தகங்களில் பணியாற்றும் அரசு செவிலியர்களுக்கும் ரூ.9300-34800+4450 G.P. வழங்கப்படுவதால், தங்களுக்கும் அரசு சம்பளத்தை வழங்கிட வேண்டும் என்று நமது மின்வாரியச் செவிலியர்கள் வேண்டுகிறார்கள்.

இதைப்போலவே மருந்தாளுனர், வாரியசெயலக உதவிபிரிவுஅலுவலர், தலைமை பட வரைவாளர் ஆகியோருடைய ஊதியக்கற்றை மற்றும் தர ஊதியத்தை அரசு பணியாளர்களுக்கு இணையாக சமன் செய்து பின்னர் 1.12.2015 முதல் புதிய ஊதியத்திற்கு கொண்டு வருமாறு வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்